# திருப்புகழ்

## முததைத தருபததி

முத்தைத் தருபத்தித் திருநகை
அத்திக் கிறை சத்திச் சரவண
முத்திக் கொரு வித்துக் குருபர
~ எனவோ தும்

முக்கட் பரமற்குச் சுருதியில்
முற்பட்டது கற்பித் திருவரு
முப்பத்து முவர்க்கத் தமரரும்
~ அடிபேணப்

பத்துத்தலை தத்தக்
    கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப்
    பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில்
~ இரவாகப்

பத்தற் கிரதத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத்
    தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித்
    தருள்வ தும்
~ ஒருநாளே

தித்தித்தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்க நடிக்கக் கழுகொடு
~ கழுதாட

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத் தொகு தொக்குத்
    தொகு தொகு
சித்ரப் பவுரிக்குத் த்ரிகடக
~ எனவோதக்

கொத்துப் பறை கொட்டக்
    களமிசை
குக்குக் குகு குக்குக் குகு குகு
குத்திப் புதை புக்குப் பிடியென
    ~ முதுகூகை

கொட்புற்றெழ நட்பற்
    றவுணரை
வெட்டிப் பலியிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப்
    பொரவல
~ பெருமாளே



உருவாய் அருவாய் உளதாய்
    இலதாய்
மருவாய் மலராய் மணியாய்
    ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய்
    விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய்
    குகனே

## நாத விந்து

நாத விந்து கலாதீ நமோநம
வேத மந்த்ர ஸொரூபா நமோநம
ஞான பண்டித சாமீ நமோநம
~ வெகு கோடி

நாம ஸம்பு குமாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்த மயூரா நமோநம
~ பரஸூரர்

சேத தண்ட விநோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர ஸம்ப்ரம வீரா நமோநம
~ கிரிராஜ

தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்ஜரி பாகா நமோநம
~ அருள் தாராய்

ஈதலும் பல கோலால பூஜையும்
ஓதலுங் குண ஆசார நீதியும்
ஈரமுங் குரு சீர்பாத சேவையு
~ மறவாத

ஏழ் தலம் புகழ் காவேரி
    யால்விளை
சோழ மன்டல மீதே மனோகர
ராஜ கெம்பிர நாடாளு நாயக
~ வயலூரா

ஆத ரம்~பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே
    முனாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மா~கயி
    ~ லையிலேகி

ஆதி யந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர்
    நனாடதில்

ஆவி னன்~குடி வாழ்வான
    தேவர்கள் ~ பெருமாளே

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

ஏறுமயி லேறிவிளை யாடுமுக
    மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக
    மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்கு
    முகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கி
    நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக
    மொன்றே
வள்ளியை மணம் புணர
    வந்தமுக மொன்றே
ஆறுமுக மான பொருள்
    நீயருளல் வேண்டும்
ஆதியரு ணா சல மமர்ந்த
    பெருமாளே
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

## கைததல நிறைகனி



கைத்தல நிறைகனி
அப்பொமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன்
~ அடிபேணிக்

கற்றிடு மடியவர்
புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை
~ கடிதேகும்

மத்தமு மதியமும்
அவத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய
~ மதயானை

மத்தள வயிறனை
உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு
~ பணிவேனே

முத்தமி ழடைவினை
முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய
~ முதல்வோனே

முப்புர மெரிசெய்த
அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த
~ அதிதீரா

அத்துய ரதுகொடு
சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை
~ யிபமாகி

அக்குற மகளுடன்
அச்சிறு முருகனை
அக்கண மணமருள்
~ பெருமாளே

ஓருரு வாகிய
ஓருரு வாகிய தாரகப் பிரமத்து
ஒருவகைத் தோற்றத்து இருமர
பெய்தி
ஒன்றா யொன்றி யிருவரில்
தோன்றி மூவா தாயினை
முருகா ~ மூவா தாயினை

இருபிறப் பாளரில் ஒருவன்
ஆயினை
ஓரா செய்கையின் இருமையின்
முன்னாள்
நான்முகன் குடுமி
இமைப்பினிற் பெயர்த்து
மூவரும் போந்து இருதாள்
வேண்ட
ஒரு சிறை விடுத்தனை
முருகா ஒரு சிறை விடுத்தனை
↑2|

ஒரு நொடி யதனில் இருசிறை
மயிலின்
முந்நீ ருடுத்த நானில மஞ்ச
நீவலம் செய்தனை
முருகா நீவலம் செய்தனை ↑2|

நால்வகை மருப்பின் மும்மதத்
திருசெவி
ஒருகைப் பொருப்பன் மகளை
வேட்டனை
ஒருவகை வடிவினில்
இருவகைத் தாகிய
மும்மதன் தனக்கு மூத்தோ
னாகினை
நால்வாய் முகத்தோன்
ஐந்துகைக் கடவுள்
அறுகு சூடிக் கிளையோ
னாயினை
ஐந்தெழுத் ததனில் நான்மறை
உணர்ந்து
முக்கட் சுடரினை இருவினை
மருந்துக்கு
ஒரு குரு வாயினை
முருகா ஒரு குரு வாயினை ↑2|

ஒருநாள் உமையிரு முலைப்பா
லருந்தி
முத்தமிழ் விரகன் நாற்கவி
ராஜன்
ஐம்புலக் கிழவன் அறுமுக
னிவனென
எழில்தரு மழகுடன் கழுமலத்
துதித்தனை
அறுமீன் பயந்தனை ஐந்தரு
வேந்தன்
நான்மறைத் தோற்றத்து
முத்தலை செஞ்சூட்[டு]
அன்றி லங்கிரி யிரு பிளவாக
ஒருவேல் விடுத்தனை
முருகா ஒருவேல் விடுத்தனை ↑2|

காவிரி வடகரை மேவிய
குருகிரி
இருந்த ஆறெழுத் தந்தண[ர்]
அடியிணை போற்ற
ஏரகத் திறைவ னென
இருந்தனையே ↑3|


4 திருப்புகழ் 1